# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# ஆறாம் பத்து

## பத்தாம் திருவாய்மொழி - உலகமுண்ட
## அலர்மேல் மங்கை புருஷகாரமாகத் திருவேங்கடமுடையானது திருவடிகளில் ஶரணம் புகுதல்

** உலகம் உண்ட பெரு வாயா! * உலப்பில் கீர்த்தி அம்மானே! *
நிலவும் சுடர் சூழ் ஒளி மூர்த்தி! * நெடியாய்! அடியேன் ஆருயிரே! **
திலதம் உலகுக்காய் நின்ற * திருவேங்கடத்து எம்பெருமானே! *
குல தொல் அடியேன் உன பாதம் * கூடும் ஆறு கூறாயே 1

கூறாய் நீறாய் நிலன் ஆகிக் * கொடு வல் அசுரர் குலம் எல்லாம் *
சீறா எறியும் திரு நேமி வலவா! * தெய்வக் கோமானே! **
சேறார் சுனைத் தாமரை செந்தீ மலரும் * திருவேங்கடத்தானே! *
ஆறா அன்பில் அடியேன் * உன் அடி சேர் வண்ணம் அருளாயே 2

வண்ணம் அருள் கொள் அணி மேக வண்ணா! * மாய அம்மானே! *
எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதே! * இமையோர் அதிபதியே! **
தெண்ணல் அருவி மணி பொன் முத்தலைக்கும் * திருவேங்கடத்தானே! *
அண்ணலே! உன் அடி சேர * அடியேற்கு ஆவா என்னாயே 3

ஆவா! என்னாது உலகத்தை அலைக்கும் * அசுரர் வாணாள் மேல் *
தீ வாய் வாளி மழை பொழிந்த சிலையா! * திரு மா மகள் கேள்வா!
தேவா! ** சுரர்கள் முனிக் கணங்கள் விரும்பும் * திருவேங்கடத்தானே! *
பூவார் கழல்கள் அரு வினையேன் * பொருந்தும் ஆறு புணராயே 4

புணரா நின்ற மரம் ஏழ் * அன்று எய்த ஒரு வில் வலவாவோ! *
புணரேய் நின்ற மரம் இரண்டின் * நடுவே போன முதல்வாவோ! **
திணரார் மேகம் எனக் களிறு சேரும் * திருவேங்கடத்தானே! *
திணரார் சார்ங்கத்து உன பாதம் * சேர்வது அடியேன் எந்நாளே? 5

எந்நாளே? நாம் மண் அளந்த * இணைத் தாமரைகள் காண்பதற்கு என்று *
எந்நாளும் நின்று இமையோர்கள் ஏத்தி * இறைஞ்சி இனம் இனமாய் **
மெய் நா மனத்தால் வழிபாடு செய்யும் * திருவேங்கடத்தானே! *
மெய் நான் எய்தி எந்நாள் * உன் அடிக்கண் அடியேன் மேவுவதே? 6

அடியேன் மேவி அமர்கின்ற அமுதே! * இமையோர் அதிபதியே! *
கொடியா அடு புள் உடையானே! * கோலக் கனி வாய்ப் பெருமானே! **
செடியார் வினைகள் தீர் மருந்தே! * திருவேங்கடத்து எம்பெருமானே! *
நொடியார் பொழுதும் உன பாதம் * காண நோலாது ஆற்றேனே 7

நோலாது ஆற்றேன் உன பாதம் * காண என்று நுண் உணர்வின் *
நீலார் கண்டத்து அம்மானும் * நிறை நான்முகனும் இந்திரனும் **
சேலேய் கண்ணார் பலர் சூழ விரும்பும் * திருவேங்கடத்தானே! *
மாலாய் மயக்கி அடியேன் பால் * வந்தாய் போலே வாராயே 8

வந்தாய் போலே வாராதாய் * வாராதாய் போல் வருவானே! *
செந்தாமரைக் கண் செங்கனி வாய் * நால் தோள் அமுதே! எனதுயிரே **
சிந்தாமணிகள் பகர் அல்லைப் பகல் செய் * திருவேங்கடத்தானே! *
அந்தோ! அடியேன் உன பாதம் * அகல கில்லேன் இறையுமே 9

** அகல கில்லேன் இறையும் என்று * அலர் மேல் மங்கை உறை மார்பா! *
நிகரில் புகழாய்! உலகம் மூன்று உடையாய்! என்னை ஆள்வானே! **
நிகரில் அமரர் முனிக் கணங்கள் விரும்பும் * திருவேங்கடத்தானே! *
புகல் ஒன்றில்லா அடியேன் * உன் அடிக் கீழ் அமர்ந்து புகுந்தேனே 10

** அடிக் கீழ் அமர்ந்து புகுந்து * அடியீர்! வாழ்மின் என்றென்று அருள் கொடுக்கும் *
படிக் கேழ் இல்லாப் பெருமானைப் * பழனக் குருகூர்ச் சடகோபன் **
முடிப்பான் சொன்ன ஆயிரத்துத் * திருவேங்கடத்துக்கு இவை பத்தும் *
பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து * பெரிய வானுள் நிலாவுவரே 11

**அடிவரவு:** உலகம் கூறு வண்ணம் ஆவா புணரா எந்நாள் அடியேன் நோலாது வந்தாய் அகல் அடிக்கீழ் உள்

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---